விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 337 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 05 புதன்கிழமை (20.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## 10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு நாளை

### ஜனாதிபதியும் கொள்கைப்பிரகடன உரை நிகழ்த்துவார்

(கொழும்பு)

10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு நாளை வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் ஜனாதி 15



## மாவீரர் வாரம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த வீரமற வர்களை நினைவுகூரும் மாவீரர் தின அனுஷ்டிப்பு வாரம் நாளை வியாழக் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்டு தனது இன்னுயிரை போராட் டக் களத்தில் ஆகுதியாக் கிய முதலாவது மாவீரர் 15

## தமிழ் மக்கள் தெற்கு அரசியலுடன் இணைந்தமை மகிழ்ச்சி

### யாழில் சீனத் தூதுவர் கீ சென்ஹொங்




*(யாழ்ப்பாணம்)* தமிழ் மக்கள் தெற்கு அரசியலுடன் இணைந்தமை மகிழ்ச்சியான விடயம் என யாழ்ப்பாணத்தில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு

### அமைச்சர் லால்காந்த



(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் அபிலாசைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். விவசாயிகள் எதிர் கொண்டுள்ள அடிப் 16

## யாழ் - சென்னை விமான சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- சென்னை இடையேயான விமான சேவையை அலியன்ஸ் எயார் விமான சேவை நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னைக்குத் 15

## வங்காள விரிகுடாவில் வலுவடையும் தாழமுக்கம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவை அண் மித்து எதிர்வரும் 23ஆம் திகதி தாழமுக்கம் வலுவடையுமென் பதால் அப்பகுதிக்குச் செல்லும் கடற்றொழி 15



## தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற அநுர மாயாஜால வித்தைக்காரர்

### உதய கம்மன்பில

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவை முழுமை யாகப் பெற்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதி வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப் படையாகஏற்றுக்கொள்ள 16



## மழையால் யாழில் இரண்டு குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மழை அனர்த்தத்தினால் யாழ்ப்பாணத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ள தாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த 15

## சபைத் தலைவராக பிமல் பிரதம கொறடாவாக நளிந்த

(கொழும்பு)

10ஆவது பாராளுமன் றத்தின் சபைத் தலைவ ராக அமைச்சர் பிமல் ரத் நாயக்க நியமிக்கப்பட்டுள் ளார்.



பிமல் ரத்நாயக்க புதிய அர சாங்கத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச் சராக உள்ளார். 15

## வாளுடன் அட்டகாசம்

### சுழிபுரத்தில் இளைஞன் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பாண்டவட்டைப் பகுதியில் வாள்வைத்து அட்டகாசம் செய்த இளை ஞன் ஒருவர் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப் பட்டுள்ளார். 15

## பிரசவத்தின்போது தாயும் சேயும் மரணம்

### மன்னார் வைத்தியசாலையின் கவனயீனம் எனக் குற்றச்சாட்டு

(மன்னார்)

மன்னார் வைத்தியசாலை யில் பிரசவத்தின் போது தாயும் சேயும் மரணமடைந்த சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

வைத்தியசாலையின் கவ னயீனமே உயிரிழப்புக்குக் கார ணம் என உறவினர் களால் குற்றம் சுமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி விவியன் சத்தியசீலன் சித்த மருத்துவத் துறையின் பீடாதிபதியாகத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக சித்த வைத்தியக் கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற சித்த மருத்துவ பீடச்சபைக் கூட்டத்தில் நடாத்தப்பட்ட பீடாதிபதித் தெரிவின் போது 06 மேலதிக வாக்குகளைப் பெற்று கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாகச் செயற்பட்டு வந்த சித்த மருத்துவக் கற்கை அலகு கடந்த ஜூலை 26 ஆம் திகதி பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது.

சித்த மருத்துவ அலகு பீடமாகத் தரமுயர்த்தப்பட்ட நாளில் இருந்து முன்னாள் துறைத் தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளருமான கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பதில் பீடாதிபதியாகச் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (ம-7)

## தொழிலதிபர் கிருபாகரன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பிரபல தொழிலதிபரும் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவருமான அழகசுந்தரம் கிருபாகரன் காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

மறைந்த கிருபாகரன் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத் தக்கது. (ம-7,33)

## அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனம்



புதிய பிரதமரின் செயலாளர் மற்றும் அமைச்சரவையின் செயலாளர் உட்பட 18 அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதற்கமைய,

பீ.பீ.சபுதந்திரி - பிரதமரின் செயலாளர், டபிள்யூ.எம்.டீ.ஜே.பெர்னாண்டோ - அமைச்சரவையின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கபில சீ.கே.பெரேரா - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு, கே.எம்.எம்.சிறிவர்தன - நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, ஜே.எம்.திலகா ஜயசுந்தர - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு, ஏ.எம்.பீ.எம்.பி.அத்தபத்து - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி - பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, எச்.எஸ்.எஸ்.துய்யகொன்த - பாதுகாப்பு அமைச்சு, டீ.டபிள்யூ.ஆர்.டி.செனவிரத்ன - பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, யூ.ஜீ.ரஞ்சித் ஆரியரத்ன - நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு, பேராசிரியர் கே.டீ.எம். உதயங்க ஹேமபால - வலுசக்தி அமைச்சு, எஸ்.ஆலோக பண்டார - பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, எஸ்.எம்.பியதிஸ்ஸ - தொழில் அமைச்சு, ஏ.விமலேந்திரராஜா - வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, டீ.பி.விக்ரமசிங்கவே - விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, எம்.ஜீ.எஸ்.என்.களுவெவ - கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, ஏ.எச்.எம்.யூ அருண பண்டார இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அருணி ரணராஜா - வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ம-7)

## அராலியில் கசிப்புடன் சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கில் ஐந்து லீற்றர் கசிப்புடன் 48 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாகக் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக, வட்டுக்கோட்டை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில்,

சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்ட போது குறித்த சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## கேள்வி அறிவித்தல்

**சபைநிதி மற்றும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை - 2024 வேலைத்திட்டம்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்**

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(i)/(ii) and (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது. அட்டவணை 11 இல் குறிப்பிடப்பட்ட கேள்விக்கான தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 11 மற்றும் பகுதி III இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ். வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ். வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 20.11.2024 ந் திகதியிலிருந்து 03.12.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிலிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 04.12.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அமையும் பிணைவைப்பு ஆவணத்தின் மூலப்பிரதி கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
08. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.11.28ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

அட்டவணை 1

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | மூத்ததம்பி வீதி புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2024/35 | 1.65மி | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 16,600.00 | 18.02.2024 |
| 02 | i.வைரவர் கோவில் கிளை ஒழுங்கை புனரமைப்பு,சண்டிலிப்பாய் ii.பாவட்டம் வீதி புனரமைப்பு,உயரப்புலம் iii.மைதான வீதி புனரமைப்பு,மானிப்பாய் Iv.யூனியன் மைதான வீதி,உயரப்புலம் - கட்டம் 11 NP/14/41(16)/W/CF/2024/36 | 3.68மி | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 36,800.00 | 03.04.2024 |
| 03 | i)கேளிமூலை வீதி புனரமைப்பு, கட்டுடை NP/14/41(16)/W/CF/2024/37 | 4.54 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 45,500.00 | 03.04.2024 |
| 05 | பத்துபனையடி வீதி புனரமைப்பு,பெரியவிளான் NP/14/41(16)/W/CF/2024/38 | 4.39 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 43,900.00 | 03.04.2024 |
| 06 | மாதகல் சந்தை திருத்தவேலை NP/14/41(16)/W/CF/2024/39 | 0.496 | 63 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 49 நாட்கள் | 4,960.00 | 18.02.2024 |
| 07 | செல்லமுத்து விளையாட்டு மைதான புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2024/40 | 0.427 | 63 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 49 நாட்கள் | 4,270.00 | 18.02.2024 |

அட்டவணை 11

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை செல்லுபடியாகும் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | கோரப்படும் செல்லுபடிக் காலம் |
| 01 | துருப்பிடிக்காத தண்ணீர்பவுசர் கொள்வனவும்,பொருத்துதலும் (Supplying and Fabrication Stainless Steel Water Bowser) NP/14/41(16)/W/PSDG/2024/41 | 30 நாட்கள் | 21.01.2025 | 15,000.00 | 30.01.2025 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
(C-1620) **20.11.2024**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையை கண்காணிக்க விசேட குழு நியமனம்

## அநுரவின் அடுத்த அதிரடி

**(கொழும்பு)**

**தேசிய மக்கள் சக்தியின் புதிய அமைச்சரவையை கண்காணிப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட உள்ளது.**



பத்து பேரைக்கொண்ட விசேட குழுவொன்றை நியமிக்க உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் அனைத்துத் திட்டங்கள் மற்றும் விலைமனுக் கோரல்கள் தொடர்பில் இந்த குழு கண்காணிப்பு நடத்த உள்ளது.

ஊழல் மோசடிகள் இடம் பெறுவதனை தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இந்த விசேட குழு அமைச்சரவையின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் நோக்கில் உருவாக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# உயரும் தேங்காய் விலை

(கொழும்பு)


இலங்கையில் தேங்காய் விலை நாளாந்தம் உச்சம் தொட்டு வருகிறது.

அந்த வகையில் சந்தையில் தேங்காயின் விலை நுகர்வோர் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

ஒருதேங்காய் ரூ.140 இல் இருந்து ரூ.180-200 ஆக உயர்ந்துள்ளது.

தேங்காய் விலை உயர்வை தொடர்ந்து அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையில் தேங்காயை பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்தது. எனினும் பொது மக்களுக்கு தேவையான அளவு வழங்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# விஜித ஹேரத்திற்கு ஜெய்சங்கர் வாழ்த்து



(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜித ஹேரத்திற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்த இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-8)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகள் குறைப்பு

## திட்டமிடும் அரசு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அதிக செலவைக் கட்டுப்படுத்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதனை நடைமுறைபடுத்த இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை அனுபவித்து வந்த வாகன கொடுப்பனவு, ஓய்வூதியம், வீடமைப்பு கொடுப்பனவு மற்றும் ஏனைய நிதி சலுகைகளை குறைப்பதற்கான பிரேரணையை இந்த குழு பாராளுமன்ற மன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பாராளுமன்றத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் 4-5 பில்லியன் ரூபா என்ற வரம்பில் உள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகளுக்காக மட்டும் ஒரு பில்லியன் ரூபா செலவிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

# மாபியாக்களிடமிருந்து மக்களை பாதுகாப்போம்

## அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

நாட்டு மக்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட அனைத்து செல்வங்களையும் மீட்பதற்காக அரசாங்கம் செயற்பட்டு வருவதாக வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, மக்களின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்களை பிழிந்து எடுத்துக் கொண்டிருக்கும் மாபியாக்களுக்கு இனி மேல் அவர்களின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் போகும்.

அதனைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் மக்கள் குறைந்த விலையிலும் தட்டுப்பாடு இன்றி பொருட்களையும் வாங்கக்கூடிய சந்தை உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி-8)



# இராஜாங்க அமைச்சர்களுக்கு அநுர அரசில் இடமில்லை

(கொழும்பு)

முன்னைய அரசாங்கங்களின் நடைமுறையில் இருந்து விலகி, புதிய அரசாங்கம் இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க மாட்டாது. ஆனால் அதற்கு பதிலாக 26-28 பிரதி அமைச்சர்களை ஓரிரு நாட்களில் நியமிக்கும் என புதிதாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சரான கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்னதாக நாட்டிற்கு முன்வைக்கப்பட்ட கொள்கை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

சில அமைச்சரவை இலாகாக்களுக்கு பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்களே தவிர அனைத்து அமைச்சுக்களுக்கும் நியமிக்கப்படமாட்டார்கள்.

அமைச்சின் செயலாளர்கள் குறித்து இன்னமும் இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், நிதி அமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்தனவைத் தக்கவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணத்தை சுவீகரித்தது பண்டாரவன்னியன் அணி



'கலைஞர் கிரிக்கெட்-2024' இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றது பண்டாரவன்னியன் அணி.

யாழ்.மாவட்ட இசைக்குழு கலைஞர் சங்கம் மாவட்டத்தில் உள்ள இசைக்குழுக்களில் உள்ள கலைஞர்களை ஒன்றிணைத்து கலைஞர்களுக்கிடையில் நல்லுறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்ட "கலைஞர் கிரிக்கெட் 2024" என்னும் துடுப்பாட்ட போட்டித் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை காசிப்பிள்ளை அரங்க மைதானத்தில் நடைபெற்றது.

பாடகர் கோகுலன் தலைமையில் சங்கிலியன் அணியும், கீபோர்ட் வாத்தியக்கலைஞர் ஷானுவின் தலைமையில் பண்டாரவன்னியன் அணியும், இசையமைப்பாளர் சாய் தர்ஷன் தலைமையில் எல்லாளன் அணியும் குறித்த போட்டித் தொடரில் போட்டியிட்டன.

புள்ளிகளின் அடிப்படையில் சங்கிலியன், பண்டாரவன்னியன் அணிகள் இறுதிப் போட்டியில் மோதியிருந்தன.

குறித்த போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் பண்டாரவன்னியன் அணி வெற்றி பெற்று "கலைஞர் கிரிக்கெட்2024" கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஒக்டபாட் ஆனந், தொடர் நாயகனாக தபேலா பிரசாத், தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக பாடகர் மதி, தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக பாடகர் சபேசன் ஆகியோர் தெரிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3263

### அபிக்கா

மனைவி வாட்சப் மெசேஜில்: ஓபிஸில இருந்து வரும் போது காய்கறி வாங்க மறந்துட வேண்டாம். கவிதா உங்களுக்கு ஹாய் சொல்லச் சொன்னா.
கணவன்: எந்த கவிதா
மனைவி: ஒரு கவிதாவும் இல்லை மேசேஜ் படிக்கிறீங்களா இல்லையா என்று செக் பண்ணிப் பார்த்தேன்

### துவாரகன்

என்ன இது இந்த சோப்பில நெய் வாசனை வருது
ஏன்யா கூறுகெட்ட மனுசா கஷ்டப்பட்டு செய்த மைசூர் பாகு ஐ எடுத்துக்குளிக்கிறாய் உனக்கு அறிவில்லையா?



### டல்மினா

ஏன்டா பாஸ் தலையில சுத்தியல போட்டாய்
நீ தானடா சொன்னாய் நம்ம பாஸ் திறமையானவர் அவருக்கு சுத்தி போடனும் என்று
டேய் திருஷ்டி சுத்தி போடனும் என்று சொன்னேன்டா தண்ணிய கொண்டு வாங்க சீக்கிரம்



### ரிதனன்

நாளைக்கு முக்கியமான வேலை இருக்கு. அலாரம் வைச்சு இருக்கேன் கரெக்டா எழுப்பி விட்டுவிடு




உன்னை எழுப்புறதுக்குள்ள என் உசுரு போயிடுமேடா

### ஜசானி

November
டேய் நில்லுடா இவ்வளவு வேகமா போய் என்ன பண்ண போறாய்?




### கென்றிக்

கணக்கு டீச்சர்: நேர்கோடு என்றால் என்ன?
முருகேசு: ஒரு "புள்ளி" வாக்கிங் போனால் அதுதான் டீச்சர் "நேர்கோடு"
கணக்கு டீச்சர்: ஓ நல்லா இருக்கே! அப்படி என்றால் "இணை கோடுகள்" என்றால் என்ன?
முருகேசு: அந்த "புள்ளி" தன் கேர்ள் பிரண்டையும் கூட்டுக்கிட்டு வாக்கிங் போனால் அது தான் "இணைகோடுகள்" டீச்சர்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA VACANCIES

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**Special Note: After processing the applications, appointments will be made in concurrence with UGC and the Treasury.**

## FACULTY OF ARTS

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Political Science / Tamil / English Literature / English Language Teaching / Education**

- **For the positions in Political Science**
  Preference will be given to those who have specialized in Political Ideology and International Relations.
- **For the positions in Tamil**
  Preference will be given to those who have specialized in the field of Grammar.
- **For the positions in English Literature**
  Preference will be given to those who have specialized in English Literature.
- **For the positions in English Language Teaching**
  Preference will be given to those who have specialized in English Language Teaching/ English
- **For the positions in Education**
  Preference will be given to those who have specialized in Humanities/ Physical Sciences/ Social Sciences

### REMUNERATION AND OTHER BENEFITS

**Remuneration:**

| Posts | Salary scales |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs.91,310-7 x 2,170-106,500/- p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11 x 1,630-97,290/- p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730/- p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary:
   i) Academic allowance
   Senior Lecturer Gr.I/Gr.II - 189%
   Lecturer (Unconfirmed) - 164%
   Lecturer (Probationary) - 144%
   ii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)
   iii) Additional monthly allowance – 20%
2. Cost of living allowance of Rs.17,800/-p.m.
3. Monthly allowance of Rs.5,000/-

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details.

**Closing date:**

Applications should reach us **on or before: 20.12.2024**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna Collection Account No: **970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than** one post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

Perfected applications shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**

(C-1617)

# இராசிபலன்

20.11.2024
கார்த்திகை 05, புதன்கிழமை
பஞ்சமி முன்னிரவு 9.36 மணிவரை

புநர்பூசம் முன்னிரவு 7.48 மணிவரை
சுபநேரம் 4.39-6.09 மணிவரை
இராகுகாலம் 12.09-1.39 மணிவரை

சந்திராஷ்டமம்: அனுசம், கேட்டை

**வளவன்**




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




குடும்பத்தினரின் ஒத்துளைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.




விட்டுப் போன உறவுகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன நன்மையுண்டு.




தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உடல்நலனில் கவனம் தேவை, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.




சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.




மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.




நிலையான வருமானத்திற்கு வழிசமைப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம்.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், எதையும் சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கும் நாள், உடல் நலனின் கவனம் தேவை.




பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

ஒருவருக்கு உள்ள நல்ல குணமே சிறந்த செல்வமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறுமி பிரியங்கா சூப்பர் சிங்கர் ஜூனியரில்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவில் விஜய் தொலைக்காட்சி தயாரித்து வழங்கும் சூப்பர் சிங்கர் ஜூனியர் - 10 போட்டியில் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த சிந்துமயூரன் பிரியங்கா என்ற 11 வயதுடைய சிறுமி போட்டியிடவுள்ளார்.

குறித்த சிறுமி சிறுவயது முதல் இசையில் ஆர்வம் காட்டி வந்த நிலையில் கடந்த தை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை நிகழ்வின் மூலம் முன்னணி பாடகராக அறிமுகம் ஆனார்.

இந்நிலையில் விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் ஜூனியர் - 10 போட்டியாளர்கள் தெரிவில் கலந்து கொண்டு அவரும் போட்டியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

குறித்த போட்டியின் போட்டியாளர்களின் தெரிவுகள் யாவும் நிறைவுபெற்ற நிலையில் பாடல் போட்டியானது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 6.30 மணிக்கு தொலைக் காட்சியில் ஒளிபரப்பு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)



# நல்லை நகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவம்

(யாழ்ப்பாணம்)

நல்லை நகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவம்-2024 எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையை துர்க்கா தேவி தேவஸ்தான உபதலைவர் சி.அருளானந்தசிவம் வழங்கவுள்ளார்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கூட்டுப் பிரார்த்தனை மற்றும் செல்வி. கஜானா நகுலேஸ்வரனின் பேச்சும், யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா "நாவலர் பெருமானின் வாழ்வும் வளமும்" எனும் தலைப்பில் சிறப்புரையினை ஆற்றவுள்ளார். துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக உப செயலாளர் இ.இராதா கிருஸ்ணா நன்றியுரை வழங்கவுள்ளார். (6-8)

# புங்குடுதீவு பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட புங்குடுதீவு பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணை பிரதேச சபை புங்குடுதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரி க.பிரசாந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச சபை செயலாளர் தி.தியாகச்சந்திரன், கௌரவ விருந்தினர்களாக புங்குடுதீவு மத்திய கல்லூரி அதிபர் கி.விநோதன், புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய அதிபர் சி.கமலவேந்தன், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி. வனிதா அருட்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-8)

# சக்கோட்டை முனைக்கு சீனத்தூதுவர் குழு விஜயம்



(கரணவாய்)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் பருத்தித்துறைக்கு நேற்று விஜயம் மேற்கொண்டனர்.

வடக்கு மாகாணத்திற்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் ஒரு பகுதியாக யாழ் வருகை தந்துள்ள சீனத் தூதுவர் நேற்று மதியம் பருத்தித்துறை சக்கோட்டை முனைக்கு குழுவினரோடு வந்து பார்வையிட்டு சென்றுள்ளார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், வடக்கு கிழக்கில் உள்ள சிறு கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை சீன அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருவதாகவும் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களர்கள் என்ற வேறுபாடுகள் இன்றி இலங்கையர்களாக வாழ்வதற்கு சீன அரசு தொடர்ந்து பாடுபடும் என சீனத் தூதுவர் தெரிவித்திருந்தார். (6-8-60)



ஏசியன் பவுண்டேஷன் பிரதிநிதிகள் யாழ். மாவட்டபதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது ஏசியன் பவுண்டேஷனால் நடைமுறைப்படுத்திவரும் சிறு நடுத்தர முயற்சியாண்மை திட்டங்களின் முன்னேற்றங்கள், மேம்படுத்தல்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# சிறுவர், முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)


புதிய சோனக தெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்கமும் முதியோர் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணிக்கு ஆறுகால்மட அறிவொளி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது. புதிய சோனக தெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்க செயலாளரும், முதியோர் சங்க தலைவருமான சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கைதடி முதியோர் இல்ல ஓய்வு பெற்ற அரச அத்தியட்சகர் தம்பியப்பா கனக ராஜா கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

# 5 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கில் ஐந்து லீற்றர் கசிப்புடன் 48 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக, வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்ட போது குறித்த சந்தேநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



மேலதிக விசாரணைகளின் பின்னர் அந்நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6-8)

# இலவச பயிற்சி நெறி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் சி.சி.ரி.வி கண்காணிப்பு பொருத்துகை தொடர்பான இரண்டு நாட்கள் கொண்ட இலவச பயிற்சி நெறி நேற்று ஆரம்பமானது.

குறித்த பயிற்சி நெறி இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

எனவே மேற்படி துறையில் சுயதொழில் உருவாக்கத்தை மேற்கொள்ள விரும்புபவர்கள் இப்பயிற்சி நெறியினை பின்பற்றி பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)



சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக Save a life நிறுவனத்தினால் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் "Seeding club" அமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன்போது குறித்த விடயம் தொடர்பில் தெளிவூட்டல் நிகழ்வும் நடைபெற்றது.

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)


யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளிஅரங்கில் இடம்பெறும்.

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் இராமசாமி சிறிதரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரள கஞ்சா பொதியுடன் மன்னாரில் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் தள்ளாடி சந்திக்கு அருகில் வைத்து மன்னார்மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களால் கேரள கஞ்சாப் பொதியுடன் நேற்று முன்தினம் இரவு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து 4 கிலோ 315 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கள்ளிகட் டைக்காடு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. மன்னார் பொலிஸாரின் விசாரணைகளின் பின் குறித்த சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-8-285)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

(659)



மலிவு விலையில்


பாடசாலை மாணவர்களுக்கான(SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

076 315 6470

(8-616)


# ஊடகப் பேச்சாளராக வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டார். (நி-8)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**279/1, யாழ்ப்பாணம் வீதி, வட்டாரம்-03**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03. யாழ்ப்பாணம் வீதியிலுள்ள இல: 279/1 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை குமாரசிங்கம் முருகானந்தம் ஆகியவர் குறித்த ஆதனம் பொன்னம்பலம் தம்பிராசா ஆகியவருக்கு சொந்தமாக இருந்தது என்றும், அவர் 1980ஆம் ஆண்டளவில் குறித்த ஆதனத்தை தனக்கு அறுதியாக விற்றிருந்தார் என்றும், அன்றிலிருந்து தானே இவ்வாதனத்தின் உடைமையிலும் ஆட்சியிலும் இருந்து வருகின்றார் என்றும் குறித்த ஆதனம் தொடர்பில் தனது பெயரில் எழுதப்பட்ட அறுதி உறுதியோ மற்றும் முன்னுறுதிகளோ தன்னிடம் இல்லை என்றும், 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் போது குறித்த ஆதனம் தொடர்பான சகல ஆவணங்களும் தொலைந்து விட்டன என்றும் குறித்த ஆதனம் தொடர்பான ஆவணங்களின் பிரதிகளைக் காணிப்பதிவகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை என்றும், குறித்த ஆதனத்தை தானும் தனது முன்னுரித்தாளரும் 30 வருட காலத்துக்கும் மேற்பட்ட காலமாகத் தொடர்ச்சியாகவும், இடையூறற்றும், முறிவற்றும் மற்றும் ஏனைய சகலருக்கும் எதிராகவும் ஆட்சி செய்து வந்ததன் மூலம் ஆட்சியுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஆட்சியுரிமை பெற்று முழுமையான உரிமையையும் உரித்தையும் பெற்றுவிட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு M.சசாங்கன் முகதாவில் 1028/15.12.2013ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

சிவநிதி சிவசுந்தரம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு M.சசாங்கன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1101/02.04.2015ஆம் இலக்க உறுதியால் குறித்த குமாரசிங்கம் முருகானந்தம் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சுப்பிரமணியம் மகள் ஹம்சதாருணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7663/01.02.2017ஆம் இலக்க உறுதியால் குறித்த சிவசுந்தரம் மகள் சிவநிதி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குமாரசிங்கம் முருகானந்தம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10346/16.01.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் மகள் ஹம்சதாருணி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

இராசரத்தினம் சாந்தன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10379/19.02.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த குமாரசிங்கம் முருகானந்தம் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சாந்தன் சஞ்சு ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2791/25.09.2024ஆம் இலக்கஉறுதியால் குறித்த இராசரத்தினம் சாந்தனும் பெண் ஜெயராணியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும்உரித்துமுடையவரானார்.

குறித்த சாந்தன் சஞ்சு ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சாந்தன் சஞ்சு ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(2465)

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா-34
உயரம் :5'7"
12இல் செவ்
தகைமை/தொழில்: BA,Teacher
எதிர்பார்ப்பு:உத்தியோகம்/வெளிநாடு
தொ.இ: B/14921

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்: பூரம்
12 இல்செவ்
உயரம் :5'4"
தகைமை/தொழில்: BA,Business
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ:B/14922

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:ரோகினி
உயரம்:6
தகைமை/தொழில்: A/L,Own shop(Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ:B/14923

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1983-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 32
உயரம் : 5'9"
தகைமை/தொழில்: Engineer(Canada)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/14944

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா-16
உயரம் : 5'2"
தகைமை/தொழில்:BA(following),TO
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14946

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா:32
உயரம் :5'6"
தகைமை/தொழில் :HND (Agriculture),BSc (following), கால்நடை போதனாசிரியர்
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14947

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அ.தி.மு.கவுடன் கைகோர்க்குமா தமிழக வெற்றிக் கழகம்?

(சென்னை)

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்று ஆட்சி அமைப்பதற்கான அனைத்து வியூகங்களையும் வகுத்து வருவதாக தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் "அ.தி.மு.க.வுடன் தமிழக வெற்றிக் கழகம் கூட்டணி அமைக்கவுள்ளதாக வரும் செய்திகள் அடிப்படை ஆதாரமற்றது எனவும், த.வெ.க.வின் அரசியல் பாதை, முழுக்க முழுக்கத் தமிழக மக்களின் நலனுக்கானது எனவும், மக்களின் பேராதரவோடு பெரும்பான்மையுடன் வென்று தமிழக மக்களின் நலனுக்கான நல்லரசை அமைப்பதே தமிழக வெற்றிக் கழகத்தின் குறிக்கோள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2026 சட்டசபை தேர்தலை இலக்காக வைத்து அண்மையில் தமிழக வெற்றிக் கழகம் எனும் கட்சியை நடிகர் விஜய் ஆரம்பித்திருந்தார்.



இதற்காக கடந்த ஒக்டோபர் மாதம் இறுதியில் தனது கட்சியின் முதல் அரசியல் மாநாட்டை, மிகவும் பிரமாண்டமாக நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இது ...

## வழி வ...

### அமெரிக்கா...

(மொஸ்கோ)

"நீண்ட தூர ஏவு... உக்ரைனுக்கு அமெ... பது உலகப்போருக்கு... எச்சரிக்கை விடுத்து...

உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தி உள்ளது. பதில் தாக்குதல் நடத்துவதற்கு ஏற்ற நவீன ரக ஆயுதங்களை அமெரிக்கா

உள்ளிட்... கள் வழ... அதன... தொலை... தாக்கி...

# எச்சரிக்கை சைரன் ஒலிக்க இஸ்ரேலுக்குள் புகுந்த ரொக்கெட்டுகள்


(ஜெருசலேம்)

எச்சரிக்கை சைரன்கள் ஒலித்ததைத் தொடர்ந்து, ஹிஸ்புல்லா லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேலுக்கு சுமார் 100 ரொக்கெட்டுகளை ஏவியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த ரொக்கெட்டுகளில் வான் பாதுகாப்பு அமைப்பு சிலவற்றை இடைமறித்து அழித்துள்ளதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பால் ஏவப்பட்ட சுமார் 60 ரொக்கெட்டுகள் நேற்று லெபனானில் இருந்து இஸ்ரேலுக்குள் நுழைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து, மேற்கு கலிலி பகுதியில் 15:09 மற்றும் 15:11 இற்கு இடையில் ஒலித்த சைரன்களைத் தொடர்ந்து, சுமார் 40 ரொக்கெட்டுகள் லெபனானில் இருந்து இஸ்ரேலிய எல்லைக்குள் சென்றது அடையாளம் காணப்பட்டுள்ளது.




அத்தோடு, மத்திய இஸ்ரேலில் உள்ள டெல் அவிவின் ராமத்கான் பகுதியில் உள்ள ஒரு வணிக மையத்தை ஹிஸ்புல்லாவின் ரொக்கெட்டு தாக்கியுள்ளது.

மேலும், டெல் அவிவின் நகரின் கிழக்கே உள்ள பினே பிராக் என்ற இடத்தில் ஒரு பேருந்தை ரொக்கெட் தாக்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதன் காரணமாக பென் குரியன் சர்வதேச விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தாக்குதலில் வடக்கு இஸ்ரேலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் சுமார் [illegible] பேர் காயமுற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன மக்கள் தொ... பாதியாக குறை...

### ஐ.நா.,கணிப்...

(ஜெனீவா)

2100 ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள் தொகை, இப்போது இருப்பதில் பாதியாகக் குறைந்து விடும் என்று ஐ.நா., மதிப்பிட்டுள்ளது.

ஒரு காலத்தில் உலகில் அதிகப்படியான மக்கள் தொகை கொண்ட நாடு என்ற இடத்தில் இருந்த சீனா, பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் மூலம் மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தியுள்ளது.

கடந்த 2021 இல் சீன மக்கள் தொகை 141 கோடியாக இருந்தது. அதன் பிறகு மக்கள் தொகையில் சரிவு ஏற்படத் தொடங்கியது. 2025இல் சீன



மக்கள் தொகை, 136 கோடி என்ற நிலையை எட்டிவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வரும் ஆண்டுகளில் நாட்டின் மக்கள் தொகை கடுமையான சரிவை எதிர்கொள்ளும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

மக்கள் தொகை

# ...து உலகப்போருக்கு ... வகுக்கும்!

## ...ாவை எச்சரிக்கும் ரஷ்யா




...ஏவுகணைகளைப் பயன்படுத்த ...அமெரிக்கா அனுமதி அளித்திருப் ...ருக்கு வழி வகுக்கும்" என ரஷ்யா ...டுத்துள்ளது.

...உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் வழாங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக தொலைதூர இலக்குகளை தாக்கி அழிக்கும் ஏவுகணைகளைப் பயன்படுத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைன் நாட்டுக்கு அனுமதி வழாங்கியுள்ளார்.

இதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ரஷ்யா வெளியுறவுத்துறை அமைச்சகம் சமூகவலைத் தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்கா அனுமதி அளித்தது உலகப் போருக்கு வழிவகுக்கும்.

ரஷ்யாவிற்கு எதிரான விரோத போக்கில் அமெரிக்கா செயற்படுகிறது.

ஏவுகணைகளுக்கு அனுமதி அளித்தது அமெரிக்காவின் பொறுப்பற்ற, ஆபத்தான முடிவு. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (நி-8)

# ...தொகை ...றையும்

## ...னிப்பு



...காடி ...ட்டி ...ப்பட் ... ...ளில் ...கை ...திர் ...நிபு ...ர். ...கை


குறைவு காரணமாக, தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படும். முதியோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும். இதன் மூலம் பொருளாதாரம், பென்சன் திட்டம், சுகாதாரத் திட்டங்களில் கடும் பாதிப்பு ஏற்படக் கூடும் என்று வல்லுநர்கள் கணித்துள்ளனர். (நி-8)

# சவுதி கட்டப்போகும் பிரமாண்ட உலகக்கிண்ண கால்பந்தாட்ட மைதானம்

## வெளியானது மாதிரி மைதானம்

(ஜெத்தா)

2034ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் நடைபெறவுள்ள பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்காக சவுதி அரேபியாவில் கட்டப்படும் புதிய கால் பந்து மைதானத்தின் மாதிரித் திட்டம் நேற்று முன்தினம் முதல் முறையாக ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டது.



இந்த மைதானம் 2029இல் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2034 FIFA உலகக் கிண்ணத்தை நடத்த சவுதி அரேபியா போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால், 2023 ஆம் ஆண்டுக்கான காலக்கெடுவிற்கு முன்னதாக, நாட்டைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏலத்தை முறையாகச் சமர்ப்பித்த ஒரே நாடு சவுதி அரேபியா மட்டுமே.

போட்டிகள் நடைபெறும் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப் படவில்லை எனவும், 2034ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால் பந்தாட்டப் போட்டியில் 48 அணிகள் இணையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2034 பிஃபா உலகக் கோப்பை சவுதி அரேபியாவில் 15 நகரங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உலகக் கிண்ண கால்பந்து போட்டியை குறி வைத்து ரியாத் நகரில் புதிய மைதானம் கட்ட சவுதி அரேபியா அரசு முடிவு செய்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியலுக்குள் காஞ்சனவை உள்ளீர்க்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்திற்கு எதிர்கட்சியில் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் தேவை என்ற அடிப்படையில், கட்சியின் எஞ்சிய தேசியப்பட்டியல் ஆசனத்திற்கு முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் பெயரை பரிசீலிக்குமாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமானினால் தேசிய ஜன நாயக முன்னணியிடம் இந்தக் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பெரும்பான்மையை கருத்தில் கொண்டு, நடந்துகொண்டிருக்கும் சீர்திருத்தங்களில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்காக, அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்கட்சிக்கு வைத்திருப்பது முக்கியம் என்று ஜீவன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, புதிய ஜனநாயக முன்னணியின் எஞ்சியிருக்கும் தேசியப்பட்டியல் ஆசனம், நாட்டின் வரலாற்றில் எரிசக்தி துறையில் கடினமான சீர்திருத்தங்களுக்கு தலைமை தாங்கிய காஞ்சன விஜேசேகரவுக்கு வழங்கப்படும் எனத் தாம் நம்புவதாக அவர் தமது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார் . (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனாமடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 150 | 250-300 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 300 | 300 |
| தக்காளி | 250 | 300 | 300 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 250 | 200-250 | 150 |
| கோவா | 200 | 200 | 300 | 250 | 250 |
| கரட் | 100 | 200 | 250 | 150 | 250 |
| பூசணி | 100 | 120 | 120 | 110 | 150 |
| புடோல் | 120 | 120 | 100 | 250 | 200 |
| வாழைக்காய் | 120 | 80 | 150 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 380 | 300 | 250 | 280 | 360 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500-600 | 600 |
| வெண்டக்காய் | 120 | 120 | 100 | 150-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 200 | 100 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 500-600 | 300 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 160 | 300 | 150 | 240 |
| கறிமிளகாய் | 500 | 600 | 500 | 500-550 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 600 | 30-60 | 600 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 300 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 120 | 150 |
| தேசிக்காய் | 500 | 800 | 1000 | 350-400 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-160 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1500 |
| வெங்காயப்பூ | -- | 500 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 120 | 60 |
| ஈரப்பலா | 120 | 200 | 100 | [illegible] | 200 |

# இன்று ஒரு தகவல் 268



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## நாற்காலி ஆசைகள்!

இந்தக் காலத்திலே எல்லாம் நாற்காலிக்கு ஆசைப்படாதவர்கள் மிகவும் அபூர்வம். உட்காருவதற்கு ஒரு நாற்காலி கிடைக்காதா? அதனுடைய ஒரு கால் உடைந்து முக்காலியாக இருந்தால் கூட பரவாயில்லை. ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம் என்று அலைகின்றவர்கள் எத்தனை பேர். இந்தக் காலத்திலே மட்டும் தான் இப்படியா? என்றால் இல்லை. அந்தக் காலத்திலேயும் அது மாதிரி ஆசைகள், சபலங்கள் இருந்திருக்கும் போல இருக்கின்றது. பரமசிவன் வசிஷ்டருக்கு ஒரு விசேடமான ஆசனத்தைக் கொடுத்திருந்தாராம். சரி அதிலே என்ன அப்படி விசேடம் என்றால் வசிஷ்டர் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு போக வேண்டும் என்று நினைத்து புறப்பட்டால் இவருக்கு முன்னாலே அந்த ஆசனம் புறப்பட்டு விடும். போய் ஒரு வசதியான இடமாகப் பார்த்து இருந்து விடும். வசிஷ்டர் போவர். அங்கே போனதும் எங்கே உட்கார்வது என்கின்ற பிரச்சினை அவருக்கு ஏற்பட்டதில்லை. அது தான் அவருடைய ஆசனம் அவருக்கு முன்னாலே போய் அவருக்காக காத்துக் கொண்டிருக்குமே. அதன் பின் என்ன கவலை. நேராக அதிலே போய் உட்கார்ந்து விடுவார். மற்ற முனிவர்கள் எல்லாம் இதைப் பார்த்தார்கள். அவர்களுக்கு பொறாமை இருந்தது. எல்லோரும் ஒரு இடத்திலே கூடி பேசினார்கள். என்ன இது? நாமும் அவரை மாதிரித் தானே. இருந்தாலும் நமக்கு அது மாதிரி ஆசனம் கிடைக்கவில்லையே என்று யோசித்தார்கள். சரி நேராக பரமசிவனிடம் போவோம். இதைப் பற்றிக் கேட்போம் என்று நினைத்துக் கொண்டு போனார்கள். பரம சிவனைப் பார்த்தார்கள்.

ஐயா நாங்களும் முனிவர்கள் தானே வசிஷ்டர் செய்வது மாதிரியே நாங்களும் தங்களை குறித்து கடும் தவம் செய்து கொண்டே தானே இருக்கின்றோம். அப்படி இருக்கும் போது அவருக்கு மட்டும் ஏன் இந்த விசேட சலுகை. என்று கேட்டார்கள். அதற்கு பரமசிவன் சொன்னார். முனிவர்களே உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்கின்றேன். அதற்கு முன்னாலே நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்றார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தனித் தனியாகப் போய் உங்களை விட உயர்ந்த ஒருவரைத் தேடிக் கண்டு பிடித்து அவருக்கு அதிதி பூஜை செய்து அவரை ஒரு மண்டலத்திற்குள்ளே என்னிடம் அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்றார். சரி என்று எல் லோரும் புறப்பட்டார்கள். அவர்கள் போனதற்கு பின் நந்தி தேவனை அழைத்து வசிஷ்டரை கூட்டிக் கொண்டு வரச் சொன்னீர். அவர் வந்தார். வணங்கி நின்றார். வசிஷ்டரே இன்றிலிருந்து ஒரு மண்டலத்திற்குள்ளே உங்களை விட தாழ்ந்தவர் ஒருவரை தேடிக் கண்டுபிடித்து அவருக்கு அதிதி பூஜை செய்து என்னிடம் அழைத்து வர வேண்டும். சரி என்று இவரும் புறப்பட்டார். சிறிது நாட்கள் போனது. முனிவர்கள் எல்லாம் திரும்பி வந்தார்கள். பரமசிவன் முன்னாலே வந்து நின்றார்கள். ஐயா எவ்வளவு தேடிப் பார்த்தோம். எங்களை விட உயர்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை என்றார்கள். வசிஷ்டரும் வந்து சேர்ந்தார். ஐயா எவ்வளவோ தேடிப் பார்த்தேன். என்னை விட தாழ்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை என்றார். அவர் தொடர்ந்து சொன்னார். என்னுடைய மனைவி எனக்கு அடங்கியவள் தானே அவளுக்காவது பூஜை செய்து அழைத்துக் கொண்டு வரலாமா என்று யோசித்துப் பார்த் தேன். என் மனது அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏன் என்றால் அவளது பதி விரதத்திற்கு முன்னால் நாம் எம்மாத்திரம் என்று யோசித்துப் பார்த்தேன். அதனாலே என்னுடைய எண்ணத்தை கைவிட்டேன். என்று மிகவும் வருத்தத்தோடு சொன்னார். இதைக் கேட்டவுடன் மற்ற முனிவர்களுக்கு வெட்கமாகப் போய்விட்டது. இந்த உலகத்திலே தங்களை விட மேலோனவர்கள் யாருமே இல்லை என்று நாங்கள் நினைத்தோம். வசிஷ்டரோ தன்னை விட தாழ்வானவர் யாரும் இல்லை என்று நினைக்கின்றார். பரமசிவன் ஏன் இந்த ஆசனத்தை அவருக்கு மட்டும் கொடுத்தார். என்கின்ற கேள்விக்கான பதில் அவர்களுக்கு கிடைத்து விட்டது. இந்தக் காலத்திலே நாங்கள் எப்படி நினைக்கின்றோம் என்றால் எல்லோரும் என்னை விட மட்டமானவர்கள் என்று நினைக் கின்றோம். அதனாலே நாங்கள் மட்டும் நாற்காலியிலே உட்கார்ந்தால் போதும் என்று நினைக்கின்றோம். ஏமாந்து போனவர்கள் சந்தர்ப்பம் பார்த்து காலை வாரி விடுகின்றார்கள். கீழே விழுந்து காலை உடைந்துக் கொள்கின்றோம். அது தான் இன்றைக்கு நடக்கின்றது.

ஒரு அம்மா தன்னுடைய கணவனை மனோ தத்துவ வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு போனார். என்ன பிரச்சினை என்று வைத்தியர் கேட்டார்.

என் கணவர் அடிக்கடி நாற்காலியிலே உட்கார்ந்து காலை உடைத்து விடுகின்றார் என்றார். அப்படி என்றால் அந்த நாற்காலியிலே தான் ஏதோ கோளாறு என்றார் வைத்தியர். அப்படி இருக்க முடியாது வைத்தியரே என்றார் அந்த அம்மா.அது எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கின்றீர்கள் என்றார் வைத்தியர். எங்கள் வீட்டிலே நாற்காலியே கிடையாது வைத்தியரே. அவர் இருப்பதாக நினைத்து உட்காருகின்றார். . அது தான் பிரச்சினை என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக உலகம்

## விளம்பர விவரணம்

Sri Lanka Insurance Life

MEDI CHAMP

**ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் மிகக் குறைந்தபட்ச கட்டுப் பணத்தில் மேலதிக மருத்துவ அனுகூல மான "மெடி சாம்ப்" காப்பீட்டை அறிமுகப் படுத்தியுள்ளது.**

குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அதிகரித்து வரும் சுகாதாரச் செலவுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் தனது சமீபத்திய சுகாதார காப்பீட்டுத் திட்டமான **"ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் "மெடி சாம்ப்"** ஐ பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலதிக சுகாதாரப் பாதுகாப்பை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள **"மெடி சாம்ப்"** காப்பீடு சுகாதார அவசரத் தேவையை பூர்த்தி செய்வதுடன் காப்புறுதிதாரர்களுக்கு நிதிப்பாதுகாப்பையும் மன நிம்மதியையும் வழங்குகிறது.

ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் இன் மேலதிக அனுகூல காப்பீடான **"மெடி சாம்ப்"** இன் அறிமுகம் இலங்கையின் குடும்பங்கள் மீது ஏற்படும் எதிர்பாராத மருத்துவச் செலவுகளின் நிதிச்சுமையைக் குறைப் பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் குறைந்தபட்ச கட்டுப்பணத்தில் ஒவ்வொரு குடும்பங்களின் நிதிப்பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதி செய்கிறது.

ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் இன் மேலதிக அனுகூல காப்பீடான **"மெடி சாம்ப்"** பல்வேறு சுகாதாரத் தேவைகளுக்கு நிதி உதவியை வழங்குவதுடன் காப்புறுதிதாரர்களுக்கு ரூ.60 மில்லியன் வரை அனுகூலம் பெரும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் ஆம்புலன்ஸ் கட்டணம், உறுப்புத் தானம், செயற்கை உறுப்பு மாற்று மேலும் கூடுதலாக மூன்று தலைமுறைகளுக்கு மேலதிக காப்பீட்டை வழங்குவதுடன் பரந்த பாதுகாப்பையும் வழங்குகிறது.


**"மெடி சாம்ப்"** இன் சிறப்பம்சமாக ஒவ்வொரு கொடுப்பனவு இல்லாத ஆண்டிற்கு **"நோ-கிளைம்"** போனஸை வழங்குவதுடன், இது உறுதி செய்யப்பட்ட தொகையில் 100% வரை வழங்கப்படும், மேலும் பல் மற்றும் ஒளியியல் தேவைகளுக்கான சிறப்புப் பாதுகாப்பும் இத் திட்டத்தில் உள்ளது.

காப்புறுதிதாரர்கள் (அமெரிக்கா மற்றும் கனடாவைத் தவிர்த்து) ஏனைய நாடுகளில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது சிறந்த மருத்துவ பராமரிப்பு மற்றும் சிகிச்சைக்கான அனுகூலம் வழங்குவதை **"மெடி சாம்ப்"** உறுதி செய்கிறது. மேலும் வெளி நோயாளிகள் , ஆயுர்வேத சிகிச்சை செலவுகள், மகப்பேறு செலவுகள் உள்ளிட்ட பல நன்மைகளை வழங்குகிறது. அதே வேளையில், காப்புறுதிதாரர்களுக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டால் எதிர்கால கட்டுப்பணம் செலுத்தாமல் **"மெடி சாம்ப்"** இன் பலன்களை பெற்றுக் கொள்ள முடியும்.

காப்புறுதிக் காலம் 5 முதல் 40 ஆண்டுகள், வயதெல்லை 18 முதல் 65 வயது வரை மற்றும் முதிர்வு வயது 75 ஆகும். மேலும் காப்புறுதிதாரர்களின் கட்டுப்பணத் தெரிவுகளாக மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்திரம். முக்கியமாக, ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் திவி திலின, எர்லி கேஷ், ஃப்ரீடம் ரிடையர்மென்ட், ஃப்ரீடம் லைஃப்ஸ்டைல் பிளஸ், வெல்த் பிளஸ், திவி சவி, ஸ்பீட் இன்வெஸ்ட்மென்ட், மினிமுத்து மற்றும் ஜனாதிரி போன்ற காப்புறுதி திட்டங்களுடன் **"மெடி சாம்ப்"** ஐ இணைக்கலாம்.

**"மெடி சாம்ப்"** அல்லது பிற முதலீட்டுக் காப்புறுதித் திட்டங்களைப் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு வாடிக்கையாளர்கள் தங்களுக்கு அருகிலுள்ள ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் கிளைக்குச் செல்லலாம் அல்லது 1377 என்ற ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைப் HOT LINE ஐ தொடர்பு கொள்ளவும்.

# முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்திய கஜேந்திரகுமார் எம்.பி



(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் நினைவு தூபியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தி சத்தியப்பிரமாணத்தினை மேற்கொண்ட யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

குறித்த அஞ்சலியின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனபலரும்கலந்துகொண்டிருந்தனர். (6-8-299)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக் கலையரங்கத்தில் இடம்பெறும்.

பாடசாலை முதல்வர் திருமதி.செந்தினி ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய வர்த்தக ஆசிரிய ஆலோசகர் திருமதி. அம்பிகைதர்சினி ரஞ்சன், கௌரவ விருந்தினர்களாக யா/உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியர் இராமநாதன் தர்மரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

# ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய 3 இளைஞர்கள் கைது

(குருமன்காடு)

வவுனியா வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்.

கடந்த வாரம் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது இளைஞர் ஒருவர் ஆண் ஆசிரியர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, மாணவி ஒருவரிடம் பேச வேண்டும் என் தெரிவிக்க இதற்கு ஆசிரியர் மறுப்பு தெரிவித்த நிலையில் அதனால் ஏற்பட்ட முரண்பாட்டினால் அன்றையதினம் மாலை குறித்த ஆசிரியர் தங்கியிருந்த வீட்டிற்கு சென்றவர்கள் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை என தெரிவித்து பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் நேற்றையதினம் சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.(6-8-250)

# திக்கம் வடிசாலை மோசடிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படும்

## பனை அபிவிருத்திச்சபை தலைவர்

(குருமன்காடு)

திக்கம் வடிசாலை கடந்த பத்து வருடங்களாக முன்னாள் அமைச்சர் ஒருவரால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு பணிபுரிந்த முன்னாள் களஞ்சிய சாலை காப்பாளர் துப்பாக்கி முனையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இங்கு நடைபெற்ற அனைத்து மோசடிகளும் விசாரிக்கப்படும் என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று [illegible] நகர் பகுதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள கற்பகம் பனை உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை பார்வையிட்டிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தலைவராக பொறுப்பேற்றது முதல் பல்வேறு ஆய்வுகளை செய்து வருகின்றேன். கடந்த காலங்களில் பனை வளம் சார்ந்த விடயங்களை பாதுகாப்பதில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பனை வளத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். பொது மக்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அத்துடன் 11 மாவட்டங்களில் பனைவளம் உள்ளது. எனவே முழுமையான கணக்கெடுப்பொன்றை செய்ய இருக்கிறோம்.

பனை மீள் நடுகையின் போது நடந்த மோசடிகளால் நிதி அமைச்சு அதனை இடைநிறுத்தியிருக்கிறது. அதனை மீள செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

மற்றும் ஏற்றுமதியில் ஈடுபடுவதற்கு பலர் விண்ணப்பித்துள்ளனர். அதற்கான கூட்டம் விரைவில் நடக்கவுள்ளது என தெரிவித்தார். (6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

635





என் குலத்து முன்னோர்கள் தென் நாட்டின் பேரரசர்களாக அரசு புரிந்த நாளில் காலா காலத்தில் கப்பம் செலுத்தாத அரசர்களை அதிகாரிகள் சிறைப் பிடித்துக் கொண்டு வருவார்கள்.

அரண்மனை முற்றத்தின் இருபுறத்திலும் அரசர்களை அடைத்து வைக்கும் சிறைகள் இருந்தன. சக்கரவர்த்தி கருணை புரிந்து எப்போது தங்களை வரும்படி சொல்லி அனுப்புவார். மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ஊருக்குத் திரும்பலாம் என்று அச்சிற்றரசர்கள் காத்திருப்பார்கள்.

பேரரசரைக் காணும் பேறு அவர்களுக்கு எளிதிலே கிட்டாது. அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கவிஞர்களும் புலவர்களும் சக்கரவர்த்தியின் ஆஸ்தான மண்டபத்துக்குப் போவார்கள். சக்கரவர்த்தி முன்னிலையில் பாடல்களைச் சொல்லிப் பரிசுகள் பெற்றுக் கொண்டு திரும்பிச் செல்வார்கள்.

அப்போது சிறையில் காத்திருக்கும் சிற்றரசர்கள் 'அடடா! இந்தப் புலவர்களுக்கு வந்த யோகத்தைப் பார்! இவர்கள் கொண்டு போகும் பரிசுகளைப் பார்!' என்று சொல்லி வியப்பார்கள். 'ஓகோ! இந்தப் புலவன் கொண்டு போவது என்வெண்கொற்றக் குடையல்லவா?' என்பான் ஓர் அரசன்.

'அடடே! இந்தக் கவிஞன் என் சிவிகையில் அமர்ந்து போகிறானே!' என்பான் இன்னொரு வேந்தன். 'ஐயோ! என் பட்டத்து யானையை இவன் கொண்டு போகிறானே!' என்பான் இன்னொரு மன்னன். 'இது என் குதிரை! இந்தக் கவிராயனை என் குதிரை கட்டாயம் ஒரு நாள் கீழே தள்ளிவிடும்!' என்று சொல்லி மகிழ்வான் வேறொரு சிற்றரசன். எல்லாப் புலவர்களுக்கும் கடைசியில் இன்னொரு புலவர் வந்தார். அவர் சிறையிலிருந்த சிற்றரசர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டார். கேட்டுக் கொண்டே சக்கரவர்த்தியின் சந்நிதானத்துக்குச் சென்று இந்தப் பாடலைச் சொன்னார்.

'என் கவிகை என் சிவிகை
என் கவசம் என் துவசம்
என் கரியீது என் பரியீது
என்பரால் பன்கவள
மாவேந்தன் வாணன்
வரிசைப் பரிசு பெற்ற
பாவேந்தரை வேந்தர்
பார்த்து!'

"இவ்விதம் அந்தப் புலவர்கள் பாடிய பாடல் தமிழ் நாடெங்கும் அப்பாலும் பரவிவிட்டது. மக்கள் அடிக்கடி பாடியும் கேட்டும் மகிழ்ந்தார்கள். இதனால் எங்கள் இராஜ்யத்துக்கே ஆபத்து வந்துவிட்டது. எல்லா அரசர்களுமாகச் சேர்ந்து வந்து படையெடுத்து எங்கள் ஊரையும் அரண்மனையையும், சிறைச் சாலையையும் எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள்"

"எல்லாவற்றையும் அழித்தாலும் அந்தக் கவியின் பாடலை அழிக்க முடியவில்லையல்லவா? உங்கள் குலம் பாக்கியம் செய்த குலந்தான்! அதன் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்!"

வாணர் குலத்தின் வீரப் புகழைக் கெடுக்க நான் ஒருவன் இப்போது ஏற்பட்டிருக்கிறேன்"

ஆகா! அந்த உண்மையை நீரே ஒப்புக் கொள்கின்றீர் அன்றோ?

ஒப்புக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது? அடிமைத்தனங்களுக்குள்ளே பெண்ணடிமை மிகப் பொல்லாதது. ஒரு பெண்மணியின் வார்த்தையைக் கேட்கப் போய், என் முன்னோர்களில் குலப்புகழுக்கு நான் மாசு தேடிக்கொள்ள நேர்ந்தது.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### போகவிட்டு புறம் சொல்லித் திரிய வேண்டாம்



(நேற்றைய தொடர்ச்சி)

என்று அதன் உருவத்தைக் கேலி பேசும். ஆமையைக் கண்டால் நண்பா உன்னைப்போல் பாதுகாப்பான ஓடு யாருக்குமே இல்லை.

ஆபத்து வந்தால் ஓட்டிற்குள் பதுங்கிக் கொள்வாய் உன்னை கொல்லவே முடியாது" என்று பாராட்டிப் பேசும்.

அது அகன்றதும் இதெல்லாம் நீரிலிருந்து தரைக்குச் சென்றால், இதைத் திருப்பிப் போட்டு ஒரு அடி கொடுத்தால் ஆள் அதோடு காலி' என்று ஏளனம் பேசும்.

விரால் மீனைப் பார்த்தால் அண்ணே நீதான் இந்த குளத்துக்கே ராசா.

உனக்குத்தான் அதிக விலை தருகிறார்கள். நீதான் பணக்கார மீன் என்று பாராட்டும்.

அது போன பின்னர் என்ன பெரிய விரால்? என்னுடைய சதை, சுவைக்கு முன்னால் நிற்க முடியாது" என்று ஏளனமாகப் பேசும்.

இதுபோல எல்லா உயிரினங்களையும் எதிரில் புகழ்ந்து பேசி அவற்றை போகவிட்டு புறம் பேசுவதையே வழக்கமாக வைத்திருந்தது.

ஒருநாள் தூண்டில்காரர் ஒருவர் போட்டு வைத்திருந்த தூண்டியில் இந்த விலாங்கு மீன் மாட்டிக் கொண்டது.

குளத்திலிருந்த எல்லா உயிரினங்களையும் கூப்பிட்டு காப்பாற்றும் படி கெஞ்சியது.

பாம்பு, நான் நஞ்சு இல்லாத வெறும் தண்ணீர்ப் பாம்பு என்றும், கெளுத்திமீன் என் தலையில் உள்ள முள் உன்னைக் காப்பாற்றாது என்றும் நண்டு, எனக்கு தலை இருந்தால்தானே உன்னைக் காப்பாற்ற மூளை இருக்கும்" என்றும்

ஆமை நானே ஓட்டுக்குள் ஒழிந்து கொண்டு இருக்கின்றேன்" என்றும்

விரால் உன்னைக் காப்பாற்ற நான் வந்து மாட்டிக் கொண்டால், உன்னை விட்டுவிட்டு பணக்கார மீன் என்று என்னைப் பிடித்துக் கொண்டு விடுவார்கள் பதில் சொல்லி யாருமே காப்பாற்ற முன்வரவில்லை.

போகவிட்டுப் புறம் சொல்லி விலாங்கு மீன் எல்லோரிடமும் கெட்ட பெயர் வாங்கியதால் எல்லோரும் ஒதுக்கி விட்டார்கள்.

எனவே நாமும் இந்தத் தவறை செய்யாமல் நேர்மையாக வாழ்வோம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எண்ணங்களை பொறுமை மற்றும் கனிவோடு கையாளக் கற்றுக் கொண்டால் அவை என் இலக்கு களை அடைய உதவக் கூடும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுரவின் அரசாங்கத்துடன் இணங்கிச் சென்று இலக்கை அடைக!

**காலம்** என்பது தெய்வத்தால் இசைக்கப்படும் இராகம் என அர்த்தமுள்ள இந்து மதத்தில் கவியரசு கண்ணதாசன் கூறுகின்றார்.

ஆக, காலத்தைத் தக்கமுறையில் பயன்படுத்த வேண்டும். கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடுகின்ற எவரும் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாகச் சரித்திரமில்லை.

இருந்தும் எங்கள் தமிழர் அரசியலில் தாண்டவமாடும் சுயநல அரசியல் எங்கள் இனத்தை கந்தறுத்து காவடி எடுக்க வைத்து விட்டது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் எங்கள் தமிழ் அரசியல்வாதிகளை நம்பி ஏமாந்து போயினர்.

இத்தகையதொரு கையறுநிலையிலேயே தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஆதரவளிக்க முற்பட்டனர்.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கான தமிழ் மக்களின் ஆதரவு என்பதற்குள் பல்வேறு பொருள் கோடல்கள் உண்டு.

அதிலும் குறிப்பாக, நாங்கள் நீண்ட காலம் தமிழ் அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு விட்டோம். எனவே இனியும் அவர்களை நம்புவதற்கு நாம் தயாரில்லை.

அதேநேரம் ராஜபக்ஷ குடும்பத்தை இந்த நாட்டின் ஆட்சிப்பீடத்தில் இருந்து துரத்துவதற்கு அரகல போராட்டத்தை முன்னெடுத்த சிங்கள மக்களுடன் நாங்கள் கைகோர்த்து பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த சிங்கள மக்கள் இந்த நாட்டின் ஆட்சியாளர்களை மாற்றுவதற்குத் திடசங்கற்பம் பூண்டனர்.

அதனை ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக வெற்றி பெறச் செய்ததன் மூலம் நிறைவேற்றியுள்ளனர்.

எனினும் சிங்கள மக்கள் எதிர்பார்த்த அந்த ஆட்சி மாற்றத்துக்கு தமிழ் மக்களால் வகிபங்கு ஆற்றமுடியவில்லை. அது துரதிர்ஷ்டமானது.

பரவாயில்லை. எல்லாம் நன்மைக்கே. ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றியில் தமிழ் மக்களின் வகிபங்கு அதிகமாக இருந்திருந்தால், சில வேளை சிங்களப் பேரினவாதக் கட்சிகள் கடந்த பொதுத் தேர்தலில் அநுரவுக்கு எதிராகக் கடும் பிரசாரம் செய்திருப்பர். தமிழர்களுக்கு அநுர தனிநாடு கொடுக்கப் போகிறார் என்று கூடக் கூறியிருப்பர்.

ஆனால், அவர்களால் அப்படியொரு பிரசாரத்தைச் செய்ய முடியாதவாறு இயற்கை தடுத்துக் கொண்டது. இப்போது பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை கடுமையாக ஆதரித்துள்ளனர். அந்த ஆதரவு இலங்கை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இந்த அருமையான சந்தர்ப்பம் எங்கள் தமிழினத்தின் உரிமைசார் விவகாரத்துக்குத் தீர்வு காணக்கூடிய சூழமைவை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தமிழ்த் தரப்புகள் தக்கமுறையில் பயன்படுத்த வேண்டும். இதைவிடுத்து உங்களின் வழமையான இனவாதத் தோத்திரத்தை அநுர அரசு மீதும் பாடுவீர்களாயின், எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

ஆகையால் அநுரவின் அரசாங்கத்தோடு முரண்படாமல் கிடைத்த சந்தர்ப்பத்தை தக்க முறையில் பயன்படுத்த வேண்டும். அதுவே புத்திசாலித்தனமாகும்.

# புதிய அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்கால செயற்பாடுகளை நம்பிக்கையோடு கொண்டு செல்ல இந்த பொதுத் தேர்தல் ஒரு முக்கிய பலமாக இருந்தது.

இந்நிலையில், 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அதிகபட்ச வாக்குகளை வென்று ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்திக்கு எனது வாழ்த்துக்கள்.

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தைக் கொண்டு வர இந்தப் புதிய அரசாங்கம் ஒரு புதிய பாதையாகும்.

நாட்டில் நிலவும் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இந்த மாபெரும் வெற்றியைப் பயன்படுத்துங்கள்.

அத்துடன் புதிய அரசாங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பு வழங்கப்படும். புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட நாம் ஒரு போதும் மறுப்புத் தெரிவிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## கார்த்திகை வாசம் மலர் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் கார்த்திகை வாசம் மலர் மற்றும் மலர் கண்காட்சியின் தொடக்க நிகழ்வானது நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 22 பிற்பகல் 3 மணியளவில் நல்லூர்க் கிட்டுப் பூங்காவில் இடம் பெறவுள்ளது

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் யுகேஷ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வின் தொடக்க உரையினை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் அவர்கள் ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## நீரில் மூழ்கிய இளைஞன் பலி

கேகாலை தெலியெல்ல நீர்வீழ்ச்சியில் மூழ்கி 27 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தை தனது நண்பர்கள் குழுவுடன் கொண்டாடிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கேகாலையை வசிப்பிடமாகக் கொண்ட அஷான் பிரபோத தனது 27வது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக இந்த அழகிய தெலியெல்லவை தெரிவு செய்திருந்தார்.

எனினும் இந்தக் குழு நீர் வீழ்ச்சிக்கு அருகில் நீண்ட நேரமாக மது அருந்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பின்னர் குழுவினர் நீர் வீழ்ச்சியில் குளித்துக் கொண்டிருந்த போது 27 வயதுடைய அஷான் நீரில் மூழ்கியுள்ளார்.

இந்நிலையில் காணாமல் போன குறித்த இளைஞனின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் நீர்வீழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்த போது மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞன் அடுத்த வாரம் வெளிநாடு செல்ல தயாராகிக் கொண்டிருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை 01 - 30, 2024

**“மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர் காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டுறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்”**

பொ.ஐங்கரநேசன்
தலைவர்-தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்

## ரயிலில் மோதியதில் மாணவன் மரணம்

கம்பஹா ரயில் நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் இரவு கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் மோதி 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹாவிலுள்ள பாடசாலை ஒன்றில் 11ஆம் தரத்தில் கல்வி கற்ற இந்த மாணவன் கம்பஹா பஹல்கம பிரதேசத்தில் ஐந்து பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ரயிலில் மோதி உயிரிழந்தாரா? அல்லது ரயிலில் இருந்து குதித்து உயிரிழந்தாரா? என்பது தொடர்பில் கம்பஹா தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## திருமலையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா-உப்பாறுப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் தாமரவில், கண்டலடியூற்றுப் பகுதியைச் சேர்ந்த மகமூத் ஷரீப் (65வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த வயோதிபர் குறித்த வீதியால் நடந்து சென்ற போது மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் பலத்த காயங்களுக்குள்ளாகி, திருகோணமலை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், விபத்துத்தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 2024.11.20 புதன் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில் காங்கேசன்துறை கடற்படை முகாம், துறைமுக ஆணையம் காங்கேசன்துறை, கடற்படை முகாம் காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னர் இதுவரை முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை

## பவ்ரல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேர்தல் பெறுபேறுகள் சம்பிரதாய அரசியல்வாதிகள் பலரை அரசியல் செயற்பாட்டில் இருந்து நீக்கிவிடும் வகையில் அமைந்துள்ளன என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

தேர்தல் தினத்தில் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் எந்த முறைப்பாடும் இல்லை.

பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரான தேர்தல் வன்முறைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் பிரசார காலப் பகுதியில் ஒரு சில வன்முறை சம்பவங்கள் தொடர் பில் முறைப்பாடுகள் கிடைத்தபோதும் தேர்தல் தினத்திலும் அதற்கு பின்னரும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை.

அதேபோன்று தேர்தல் சட்ட திட்டங்களை தேர்தல் ஆணைக்குழு, பொலிஸார் மிகவும் உறுதியாக கடைப் பிடித்து வந்தனர்.

இடம்பெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தல், தேர்தல் கலாசாரத்தை முற்றாக அரசியல் வரைபடத்தில் இருந்து அகற்றிவிடவும், சம்பிரதாய அரசியல்வாதிகள் பலரை அரசியல் செயற்பாட்டில் இருந்து நீக்குவதற்கும் இந்த தேர்தல் பெறுபேறு அமைந்துள்ளது. அந்த வகையில் இந்த தேர்தல் மிகவும் தீர்மானமிக்கதாக அமைந்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தேர்தல் நடவடிக்கைகள் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றாலும் அரச அதிகாரங்கள் மற்றும் அரச சொத்துக்கள் பாவனை மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால் இந்த தேர்தலில் அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துக்களின் பாவனை பயன்படுத்தப்படாத மட்டத்திலேயே இருந்து வந்தது.

அதனால் நீதி மற்றும் சுதந்திரமான தேர்தல் ஒன்றுக்கு தேவையான அடிப்படை அளவுகோளில் நூற்றுக்கு 80 வீதத்துக்கும் அதிகம் பூரணப்படுத்துவதற்கு முடியுமான தேர்தலாகவே இந்த தேர்தலை நாங்கள் காண்கிறோம்.

இந்த நிலை தொடர்ந்தால் எதிர் காலத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தேவைப்படாது என நாங்கள் நினைக்கிறோம் எனத் தெரிவித்தார். (நி-8)

# விவசாய அபிவிருத்தி முன்னுரிமை பெறவேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உணவுற்பத்தி, உணவுத்தேவை, உணவுபகிர்ந்தளிப்பு, ஊட்டச்சத்து உணவு, உணவே மருந்து இவையெல்லாம் உணவின் தனித்துவத்தை பறைசாற்றும் வெறுமனே பதங்களல்ல. உணவுக்காக அலைந்து திரியும் மக்களின் தேவைகள். உற்பத்தி பெருக்கம் இன்னும் எமது சொல்லிலேயே இருக்கின்றது நடைமுறையில் நடப்பதும் பின்னர் நலிந்து போவதுமாக ஒரு நிச்சயமற்ற நிலையிலேயே தங்கியிருக்கின்றது.

உணவின்றி எதுவுமே இல்லை என்பதனை பலவாறாக உணர்த்தினாலும் உடலுக்கான ஊட்ட சக்தி உணவின் மூலமே கொடுக்க முடியும். அதிலும் சுத்தமான சுகாதாரமான சுவையான சுகமான உணவாக இருக்க வேண்டும் என எவரும் எதிர்பார்க்கின்றனர். அதில் எந்த தப்புமே கிடையாது மாறாக உணவுற்பத்தியை அதிகரிக்க அதற்குத் தேவையான ஊட்டச் சத்துக்களும் அவசியம். விவசாயிகளின் பக்கத்திலிருந்து பார்த்தால் உணவை உற்பத்தி செய்வதிலுள்ள சிரமங்களும் வெறுப்பும் அதனை சந்தைப்படுத்துவதோடு தொடர்பு கொண்டதாக இருக்கின்றது.

உலக உணவு தாபனம் 2024 இல் கொலம்பியா நாட்டில் நடத்தி முடித்திருக்கின்ற ஐக்கிய நாடுகளின் பல்வகைத்தன்மைக்கான கருத்தரங்கில் [UN Biodiversity Conference] பல்வகைத்தன்மையின் குறிக்கோளை எய்துவதற்கு வேளாண்உணவு மிக முக்கிய பங்களிக்கின்றது என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

"இயற்கையுடனான அமைதி" என்னும் கருத்தினை மையப்படுத்தி நடைபெற்ற கருத்தரங்கில் உலகளவில் பல்வகைத் தன்மையை பாதுகாக்கவும் பல்வகைத் தன்மை இழப்பு, காலநிலை மாற்றம் மற்றும் பேண்தகு விவசாய அபிவிருத்தி என்பனவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. வேளாண் உணவு முறைக்கான மாற்றம் வெறுமனே ஒரு செயற்பாடு மட்டுமன்றி அது பேண்தகு பலவகைத் தன்மையை அடைவதற்கு மிகமுக்கியமானதாகும். இம்முறை 8000 இற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட நிகழ்வாக அமைந்திருக்கின்ற தென்றால் மிகையாகாது. உலகளாவிய கருத்தரங்கில் வெளிக்கொணரப்பட்ட முடிவுகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

விவசாயத்தின் முக்கியத்துவத்தில் 4 விடயங்கள் முழுமையாக அடங்கியிருக்கின்றன. அவையாவன சிறந்த உற்பத்தி, சிறந்த ஊட்டச்சத்து, சிறந்த சூழல், அத்துடன் அனைவருக்கும் சிறப்பான வாழ்க்கை. எமது தேவைக்கான உணவை நாமே எமது தேசத்தில் உற்பத்தி செய்வதை முதலில் நோக்காக கொண்டு செயற்படுவோம்.

எமது மக்களுக்கான உணவினை வழங்கி அதற்கும் மேலாக நாம் உற்பத்தி செய்ய முடிந்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனைப் பற்றி ஆலோசிக்கலாம்.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினையே.. அழித்திடுவோம் என்று அறைகூவிய எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞனின் கருத்து இங்கே முக்கியத்துவம் பெறுகின்றது. உலகை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



மக்களுக்காக உயர்த்திய அந்தக் குரல் இன்றும் எமக்கு படிப்பினையாகியிருக்கின்றது.

எமது தேசத்தில் உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிவகைகளுக்கு அவசியம் முன்னுரிமை கொடுத்தாக வேண்டும். மக்களை உணவுற்பத்தியில் ஈடுபடுவதனை ஊக்குவிக்கும் வழிமுறைகள் அவசியம் வழமைக்கு வந்தாக வேண்டும். விவசாய கொள்கைகள் அவ்வப்போது தளம்பல் நிலையில் இருப்பதனால் விளைபொருட்களின் விலைகளும் அந்த காலத்திற்கேற்ப தளம்பலடைகின்றமை துர்ப்பாக்கிய நிலையாகும்.

முதலிடும் பணத்திற்கான வருவாயை அறுவடைகாலத்தில் பெறமுடியாமல் போவது விவசாய பெருமக்களை பிறதொழிலில் பணத்தை முதலீடு செய்ய தூண்டுகின்றது. பெற்ற விளைச்சலையும் ஆதாயத்துடன் சந்தைப்படுத்துவதில் பலவிதமான இடர்களை விவசாயிகள் சந்திக்க வேண்டியிருக்கின்றது. பல கருத்தரங்குகள். செயலமர்வுகள் இதுபற்றி கலந்துரையாடி பெற்ற முடிவுகளால் பெரிய மாற்றத்தை காண முடியவில்லை. விவசாயியையும் விவசாயத்தையும் மையப்படுத்திய முடிவுகளாக அவை மாற்றப்படும்வரை எந்த மாற்றத்தையும் நாம் கண்ணார காண முடியாது.

சந்தைப்படுத்தல் மற்றும் அறுவடைக்கு பிந்திய களஞ்சியப்படுத்தல் என்பன எமக்கு பேசுபொருளாகவே பல ஆண்டுளாக இருக்கின்றன. பேசிப்பேசி எந்த நடைமுறைச்சாத்தியமான விடயங்களும் நடந்தாகவில்லை. மாறாக காலநிலை மாறி மழை அதீதமாக பெய்து விளைந்த நெல்லையும் காயவிட முடியாது வெள்ளருவியாக வெட்டி காப்பெற் வீதிகளின் ஓரத்தில் காயவிடுகின்றனர்.

இவ்வாறு காயவிடுதலில் நெல்லில் அதிகளவிலான பார உலோகங்கள் செறிவடைவதான கதையினால் விவசாயிகள் சோர்வடைந்திருக்கின்றனர். இவ்வாறு காயவிடுவதனால் மேற்கூறியமை உண்மையா என்பதனை அறிவார்ந்த பெருமக்கள் கண்டறிந்து உண்மைநிலையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

நெல்லுக்கு இந்த நிலையென்றால் வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற மரக்கறிப் பயிர்களுக்கு வேறுவிதமாக அமைந்துவிடுகின்றது. வெங்காய அறுவடைகாலத்தில் வெளிநாடுகளிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகின்றது.

ஏன் என்பதற்கு விடையாக விலையை குறைப்பதற்காகவும் நுகர்வோர் பயனடையவும் என சாக்குப் போக்கு சொல்லப்படுகின்றது.

தற்துணிவான அரசின் நடைமுறைச் சாத்தியமான விவசாயத்தையும் விவசாயியையும் மையப்படுத்திய சாதகமான அவ்வப்போது மாற்றமடையாத தீர்க்கமான கொள்கைகள் நிச்சயமாக எமது விவசாயத்தை மேம்படுத்தவும் இன்னமும் தற்கால விஞ்ஞான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாற்றம் பெறவேண்டும்.

இங்கிருக்க முடியாது என்றுணர்ந்து விவசாய செய்கையில் ஈடுபட்ட பல இளையவர்கள் பிறதேசம் புகுந்து விட்டனர். எமது விவசாயத்தை கிராமப்புறங்களில் செய்வதற்கான ஆளணி நலிவடையத் தொடங்கியிருக்கின்றது. ஆனாலும் இருப்பவர்களையாவது விவசாய செய்கையில் முழுமூச்சுடன் இறங்குவதற்கு நம் தேசக்கொள்கைகள் முனைப்புக் காட்டவேண்டும். இத்தேசத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் நிச்சயமாக விவசாயிகளையும் விவசாயத்தையும் காப்பாற்றும் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எமது உணவுற்பத்தியை மென்மேலும் பெருக்க வழிசெய்யும் என நிச்சயமாக நாம் நம்பலாம். அனைவரும் ஒன்றிணைந்த முயற்சியாகவே இனியொரு பசுமைப்புரட்சி அமையவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலுவடையும்...

லாளர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை மேல், சப்ரகமுவ, ஊவா, தென் மற்றும் வட மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

பலத்த மழையுடன் மின்னல் தாக்கங்களும் ஏற்படலாம் எனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## விமான சேவை...

தினமும் சேவையில் ஈடுபட்டு வந்த இந்திய விமான சேவையான அலியன்ஸ் எயார் நிறுவனமே தனது சேவையை இந்த மாதம் முதல் இடைநிறுத்தியுள்ளது.

இதன் காரணமாக தற்போது யாழ்ப்பாணம்- சென்னைக்கான விமான சேவையை இன்டிக்கோ எயார் நிறுவனம் மட்டுமே நடத்தி வருவதனால், தினமும் இடம்பெற்று வந்த இரு சேவைகள் ஒரு சேவையாக மட்டுமே இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பிரசவத்தின்...

தப்பட்டது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியை சேர்ந்த 28 வயதான வனஜா என்ற திருமணமாகி 10 வருடங்களே ஆன இளம் தாயே நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

முன்னதாகவே குறித்த பெண்ணுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டிருந்த போதிலும் உரிய விதமாக கவனிக்கப்படவில்லை எனவும் பெண் தனக்கு சிசேரியன் செய்யுமாறு கோரிக்கை விடுத்ததாகவும்வைத்தியர்கள் இயற்கை முறையில் பிரசவிக்க முயற்சித்த நிலையில் தாயும் பிள்ளையும் மரணமடைந்துள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் கவனயீனத்தாலேயே குறித்த மரணம் இடம்பெற்றுள்ளதாகவும் மரணம் அடைந்த விடயத்தை நீண்ட நேரமாக உறவினர்களுக்குச் சொல்லாமல் மறைத்ததாகவும் உயிர் இழந்த பெண்ணின் உடலைக்கூட பார்ப்பதற்கு பெற்றோரை அனுமதிக்கவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளதுடன்,

குறித்த பெண்ணின் மரணத்துக்கு உண்மையான காரணம் என்ன என தெரிவிக்கும்வரை உயிரிழந்த பெண்ணின் உடலைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என உறவினர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் பொதுமக்கள்,பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் கூடியிருந்த போதிலும் வைத்தியசாலை பணிப்பாளரோ பொறுப்புவாய்ந்த அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு நீண்ட நேரம் வருகை தரவில்லை எனவும்அவருடைய தொலைபேசியும் இயங்கவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-7,285)

## வாளுடன்...

குறித்த இளைஞன் நேற்று வாள் மூலம் பொதுமக்களுக்கு மிரட்டுதல் விடுத்த நிலையில் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

18 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு அட்டகாசம் செய்துள்ளார்.

இதனையடுத்து, பிடிக்கப்பட்ட இளைஞனை வட்டுக்கோட்டைப் பொலிஸிடம் மக்கள் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழில்...

முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட J/315 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும், J/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இரண்டு குடும்பங்களின் வீட்டின் மீதும் மரங்கள் முறிந்து விழுந்ததால் வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


லொத்தர் வெற்றி வாய்ப்பு

18.11.2024 திங்கள் சீட்டிழுக்கப்பட்ட லக்கி செவின் (Draw 0485) மூலம் மந்திகை விற்பனை முகவர் R.சுதர்ஷன் விற்பனை ஊடாக ரூபா 25 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது. சுதர்ஷன் விற்பனை செய்த லக்கி 7 ரிக்கெட்மூலம் கடந்த (12.11.2024) செவ்வாய் 6 நாள் முன்பாக 250,000/= வெல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

S.K.THILAKAWATHY
NLB DISTRIBUTOR A146
(2466) K.K.S ROAD, JAFFNA.


## 10ஆவது...

பதி அநுர குமார திஸாநாயக்கவும் தனது கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார்.

காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள 10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் பங்குபற்றவிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் காலை 9.00 மணிக்குப் பாராளுமன்ற வளாகத்திற்கு வருகை தருமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்கு வரும்போது உறுப்பினர்களின் வாகனங்கள்பொலிஸாரால்அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிறுத்தலிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களின் கூடங்களில் நுழைவதுடன் வாக்கழைப்பு மணியோசை அடிக்கும்வரை அங்கு தங்கியிருத்தல் வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துணைவி அல்லது துணைவரோடு வருகின்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் நுழைவாயில் அருகில் இறங்க வேண்டும். ஏனைய உறுப்பினர்களும் உறுப்பினர்களின் நுழைவாயிலின் அருகில் இறங்க வேண்டும்என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## மாவீ...

சங்கரின் நினைவாக, அவர் உயிரிழந்த கார்த்திகை 27ஆம் திகதி, விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாவீரர் தினமாக 1987 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப் பட்டது.

மாவீரர் நாளை அனுஷ்டிக்கும் வகையில் கார்த்திகை 21ஆம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாவது வழமை.

அந்த வகையில் இவ் மாவீரர் வாரத்தில் துயிலுமில்லங்களிலும் பொது இடங்களிலும் அகவணக்க நிகழ்வுகள் உணர்வுபூர்வமான முறையில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## சபைத்...

அதேபோல், அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.19
சீட்டிழுப்பு இலக்கம் 5660
X 6 7 8 1 0 4
அத சம்பத X 8 1 0 4
சீட்டிழுப்பு இலக்கம் 235

தன நிதானய
திகதி - 2024.11.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1690
R 30 39 47 67 R
Double Chance 47388

மெகா பவர்
திகதி 19/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2008
C 20 31 64 69 77
Double Chance 149448

லக்கி 7 VIP
திகதி 2024.11.19
சீட்டிழுப்பு இலக்கம் 0486
Q 8 8 5 2 2 1 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3902
சீட்டிழுப்பு திகதி 19.11.2024
K 04 25 41 70
K 137683

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.19
சீட்டிழுப்பு இலக்கம் 969
சிம்மம் 06 08 41 53 சிம்மம்
181728 33

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.11.2024 வெற்றி வாரம் 368
X 8 9 5 6 5 9
18013
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,806,420.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2634
சீட்டிழுப்பு திகதி 2024.11.19 தினம் செவ்வாய்க்கிழமை
33 35 55 71 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,343,056.80

சனிதா
திகதி 19.11.2024 வெற்றி வாரம் 4795
09 18 43 47 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,717,291.60
20966

சசிரி
வெற்றி வாரம் 560
சீட்டிழுப்பு திகதி 19.11.2024
செவ்வாய்க்கிழமை
03 11 16
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4346
சீட்டிழுப்பு திகதி 19.11.2024 தினம் செவ்வாய்க்கிழமை
11 27 48 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,281,374.40
105186

B 15 11 31 51 74
சீட்டிழுப்பு வாரம் 1810
19.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,791,720.00

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2460
சீட்டிழுப்பு திகதி :2024.11.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,370,581.60
ADA KOTIPATHI
01 27 33 65 G
630026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இனவாதத்திற்கு இடமில்லை

## அமைச்சர் சந்திரசேகர்

வடக்கில் இனவாதத்திற்கு இடமில்லை எனவும் மக்களே அதனை நிராகரித்துள்ளதாகவும் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வள அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அமைச்சு பதவியேற்றதன் பின்னர் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் சில அரசியல் குழுக்கள் இனவாதப் பிரச்சினைகளை எழுப்ப முயற்சித்து வருவதாகவும், ஆனால் மக்கள் அதனை நிராகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஐந்து வருடங்கள் வாயை மூடிக்கொண்டு இருக்குமாறு மக்கள் சைகை காட்டியிருப்பதால், எதிர்காலத்தில் பிரச்சினைகளை உருவாக்க முயல்பவர்களுக்கு மக்களே பதில் அளிப்பார்கள்.

இது மக்கள் அரசாங்கம் எனவும், இதனைப் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல வேண்டிய பொறுப்பு மக்களுக்கு இருப்பதாகவும், அரசாங்கம் மந்திரவாதிகளோ, பல்லு கொண்டவர்களோ இல்லை எனவும், அனைவரும் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

குறிப்பாக கடற்றொழில் அமைச்சு மீனவர்களுக்கு சொந்தமான நிறுவனம் என்பதனால் கடந்த காலப் பிரச்சினைகளை ஒதுக்கி வைத்து மீனவர்களை முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

காலங்காலமாக இருந்து வரும் அரசியல் தலையீடுகள் தொடராது எனவும், அதிகாரிகளுக்கு பணி செய்வதற்கு தேவையான சுதந்திரம் உள்ளதாகவும், ஆனால் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தக் கூடாது எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதே மக்களின் ஆணை என்பதால், நீண்டகாலமாக நிலவி வரும் மோசடிகள், ஊழல்கள், முறைகேடுகளை களைந்து, அரசாங்கம் முன்வைக்கும் கொள்கைத் திட்டத்தில் இணையுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# யாழில் விபத்து மூவர் படுகாயம்

யாழில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று யாழ்ப்பாணம் - உப்புவேலி சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து நெல்லியடி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும், நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வானும் யாழ். உப்புவேலி சந்திக்கு அண்மையில் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும், வானில் பயணித்த ஒருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

## தெற்கு...

யாழ். மாவட்ட மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தெற்கை மையப்படுத்திய அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்துள்ளனர். இதனூடாக தமிழ் மக்கள் பரந்த சிந்தனையுடன் விடயங்களை நோக்க ஆரம்பித்துள்ளமை தெளிவாகின்றது.

நான் இன்று(நேற்று) பருத்தித்துறை முனைக்கு சென்றிருந்தேன். அங்கு ஒரு வாக்கியம் எழுதப்பட்டிருந்தது. "பன்மைத்துவத்தின் ஒற்றுமை" அந்த வாக்கியத்தின் அர்த்தம் கடந்த பாராளுமன்ற தேர்தலில் சரியாக பிரதிபலித்துள்ளது. இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையை எடுத்துக் காட்டுகின்றன. அவ் வாறான தொரு சந்தர்ப்பத்தில் நான் இங்கு விஜயம் செய்துள்ளமை அர்த்தமுள்ளதொன்றாக அமைந்துள்ளது.

மேலும், தமிழ் மக்கள் பரந்த சிந்தனையுடன் விடயங்களை நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். இதனை இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை, நல்லிணக்கம் மேம்பட்டு ஒரு ஒளிமயமான எதிர்காலம் நாட்டுக்கு ஏற்படுவதற்கான குறியீடாகவே நான் பார்க்கின்றேன் என்றார்.

இலங்கை சீனாவின் நீண்ட கால நண்பனாக இருப்பதினால் இலங்கை அரசாங்கம் எடுக்கின்ற அனைத்து முடிவுகளையும் சீனா மதிக்கும் என்றார். (ம-7)

## தமிழ்...

வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை தேர்தல் வரலாற்றில் தனித்த அரசியல் கட்சி ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து வெற்றி பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவை முழுமையாக வென்று வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் பாராளுமன்றத் தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.

நான் மாயாஜால வித்தைக்காரரல்ல என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை முற்றிலும் பொய்யானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஜனாதிபதி உண்மையில் மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒட்டுமொத்த மக்களின் ஆதரவையும் பெற்று ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளமைக்கு நன்றியும் அரசுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசைக் கைப்பற்றுவதற்காக பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு தோற்றம் பெற வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்தினோம்.

இந்த மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை 2025 மார்ச் மாதத்துக்குப் பின்னர் சமர்ப்பிப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தில் இருந்து விலகி பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா? அல்லது செயற்றிட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்தி அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா? என்பதில் ஒன்றை அரசு தீர்மானிக்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது என்றார்.(ம-7)

## விவசாயி...

படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என விவசாயத்துறை, கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

விவசாயத்துறை அமைச்சில் கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டு மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளார்கள்.

எமது அரசாங்கத்தில் அனைத்து இன மக்களும் பங்காளர்களாகியுள்ளமை கட்சி என்ற ரீதியில் நாங்கள் பெற்றுக் கொண்ட மாபெரும் வெற்றியாகும். தேர்தல் பெறுபேற்றின் வெற்றியை காட்டிலும் அது அப்பாற்பட்டது.

அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் அபிலாசைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். பொருளாதார ரீதியில் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு முறையான கொள்கை திட்டங்களுடன் தீர்வு காணப்படும்.

பெரும்போக விவசாயத்துக்கு தேவையான உரம் தடையின்றி விநியோகிக்கப்படும். அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உணவு, பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமாயின் விவசாயிகளை வளப்படுத்த வேண்டும். தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு முறையான மற்றும் நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க அரச சேவையாளர்களின் ஒத்துழைப்பை முழுமையாக எதிர்பார்த்துள்ளோம் என்றார்.(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1619)

076 825 7716 (ஆகாஸ்)

**நாய்க் குட்டிகள் விற்பனைக்கு**
(Lion sheperd)
இரண்டு நாய்க் குட்டிகள் உடனடி விற்பனைக்குண்டு
ஒரு ஆண், ஒரு பெண்
ஒரு குட்டி : 25 000/=
சோடியாக வாங்குபவர்களுக்கு விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(2461)
தொடர்பு
074 2426 642

**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-1618)

**காணி விற்பனைக்கு**
கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் 400m தூரத்தில் பிரதான வீதியில் இருந்து 50m தூரத்தில் இரண்டாவது காணியாக உள்ள 20 பரப்பு 6 குளி அளவுடைய மேட்டுக்காணி உடன் விற்பனைக்குள்ளது.
வீடு கட்டுவதற்கு உகந்த மேட்டுக்காணி 4 துண்டுகளாகப் பிரித்தும் வழங்கப்படும்
(5477)
077 4366 704 / 075 1640 104

**தளபாடங்கள் தேவை**
யாழ். நகரில் அமையவுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு வாங்குகள், மேசைகள் போன்ற தளபாடங்கள் தேவைப்படுகின்றன. மேற்படி தளபாடங்களை விற்க விரும்புபவர்கள் கீழுள்ள தொடர்பு இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
(2463)
077 8579 800
077 9707 673

**PREGNANCY VOUCHER**
கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)
Happy Super market - உரும்பிராய்
077 780 8030
(560)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.